## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.43/2015

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தினகரன் | மதம் | : இந்து |
| த/பெ | : தங்கராஜ் | ஜாதி | : -- |
| வயது | : 54 | கிராமம் | : லட்சுமிவிலாசபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**27.07.2026**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சி சொல்ல அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கின் பிராது, எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து உள்ள ஊருக்கு எத்தனை தொலைவில் நான் வசிக்கும் கிராமம் உள்ளது என்றால் 3 கி.மீ. இருக்கும். வழக்கு வாதி ஜெயசீலி எனது சகோதரி என்றால் ஆமாம். வழக்கு A, B அட்டவணை சொத்துக்களின் புல எண் என்ன என்றால் புல எண்.184/22 ஆகும். புல எண்.184/22, புல எண்.184/21 ஆகிய இரண்டுமே ஆரம்பத்தில் சாலை புறம்போக்காக இருந்தது என்றால் புல எண்.184/22 நத்தம் புறம்போக்காகும், புல எண்.184/21 சாலை புறம்போக்காகும். புல எண்.184/22 ஐ என் சகோதரி யாரிடமும் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். என் சகோதரியின் கணவர் இந்தியன் ரயில்வேயில் பணிபுரிந்தார் என்றால் ஆமாம்.

2. வாதிக்கு பட்டா எந்த வருடம் கொடுத்தார்கள் என்றால் 2013ல் கொடுத்தார்கள். நான் சொல்வதுபோல் பட்டா அரசாங்கத்தில் இருந்து என் சகோதரிக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த மறுநாள்தான் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவீடு செய்தார்

என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் நீள, அகலம் நான்கு எல்லைகள் தவறாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது. நில அளவையருடன் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளக்கவில்லை என்றால் சரிதான். புல எண்.184/22ல் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்தார் என்பதற்காக நில அளவையர் மூலமான எந்த ஆவணமும் எங்கள் கைவசம் இல்லை என்றால் சரிதான். பி அட்டவணை சொத்தின் நீள, அகலம் தெரியுமா என்றால் ஜெயசீலி சொத்தின் அளவுதான் தெரியும்.

3. வழக்கிற்கு முன்பே பிரதிவாதி கடைக்கால் போட்டு கட்டுமான வேலைகளை ஆரம்பித்துவிட்டார் என்றால் ஆமாம். அந்த ஆக்கிரமிப்பு என்ன அளவு என்று நான் குறிப்பாக சொல்ல முடியாது என்றால் 7 அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். 7 அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளாரா என்றால் தோராயமாக 4 அல்லது 5 அடி இருக்கலாம். பிரதிவாதி புல எண்.184/21ல்தான் கட்டுமானம் கட்டியுள்ளார் என்றால் இல்லை. புல எண்.184/22ல்தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். வாதி தனது வீட்டின் வடக்கு தெற்கு இருபுறமும் காலியிடம் விட்டுதான் வீடு கட்டியுள்ளார் என்றால் வடக்கு பக்கம் 4 அடியும் தெற்கு பக்கம் 7 அடியும் காலியிடம் விட்டு கட்டியுள்ளார். அந்த 7 அடியில்தான் பிரதிவாதி 5 அடி கட்டுமானம் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

4. நீதிமன்ற ஆணையர் வந்தபோதுதான் ஆக்கிரமிப்பு விவரம் எங்களுக்கு தெரியும் என்றால் அதற்கு முன்பே கடைக்கால் எடுக்கும்போதே தெரியும். அவர் வீடு கட்ட ஆரம்பிக்கும்போதே ஆக்கிரமிப்பு செய்கிறார் என்று தெரிந்துதான் ஆட்சேபணை செய்தோம். வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கிறார் என்றும் அதை தடுக்க வேண்டும் என்றும் என் சகோதரி வழக்கு தாக்கல் செய்திருந்தால் தவறானதா என்றால் வழக்கை அம்மாவாசை தான் முதலில் வழக்கு தாக்கல் செய்தார். வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கிறார் என்றும் அதை தடுக்க வேண்டும் என்றும் என் சகோதரி வழக்கு தாக்கல் செய்திருந்தால் தவறானதா என்றால் தவறானதுதான்.

5. பிரதிவாதி அமாவாசை புல எண்.184/21ல் கட்டுமானம் கட்டுவதற்கு

எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். என் சகோதரி அனுமதி கொடுத்த பின்புதான் இடத்தை அளந்து பார்த்து பிரதிவாதி புல எண்.184/21ல் வீடு கட்ட ஆரம்பித்தார் என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் பிரதிவாதி பி அட்டவணை சொத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் புல எண்.184/21ல்தான் கட்டுமானம் கட்டியுள்ளார் என்றாலும் சரியல்ல. புல எண்.184/22ல்தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். A, B அட்டவணை சொத்துக்கள் அரசுக்கு சொந்தமானது என்றாலும் என் சகோதரிக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் 2013ல் என் சகோதரிக்கு பட்டா கொடுத்துள்ளார்கள். பி அட்டவணை சொத்தில் எந்த உரிமையும் இல்லாமல் என் சகோதரி தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)